R.N.I.No:TNTAM/2022/81515

AGNI SIRAGU FOUNDATION

சாணக்யா ரிப்போர்ட்டர்


புலனாய்வு மாதமிருமுறை இதழ்

Volume: 3 Issue: 17 2024 September 01 to 15 8 Pages Price Rs. 5/-

# மகளிர் உரிமைத்தொகை அனைவருக்கும் கிடைக்குமா?

# ஓராண்டு நிறைவு பெரும் இத்திட்டத்தில் சர்ப்ரைஸ் !!!

சென்னை: தமிழகத்தில் மகளிர் உரிமைத்தொகை திட்டம் தொடங்கப்பட்டு வரும் செப்டம்பர் 15ஆம் தேதியுடன் ஓராண்டு நிறைவு பெறுகிறது. இதனையொட்டி, இந்த திட்டத்தின் கீழ் கூடுதல் பயனாளிகள் பயன்பெறும் விதமாக, திட்டத்துக்கான விதிமுறைகள் தளர்த்தப்படுவது குறித்தும், குறிப்பாக வருமான வரம்பை ரூ.5 லட்சமாக உயர்த்த பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. தமிழகத்தில் மாதம் தோறும் மகளிருக்கு ரூ.1000 வழங்கும் மகளிர் உரிமை தொகை திட்டம் செயல்படுத்தப்படும் என்று திமுக சட்டமன்ற தேர்தலின் போது வாக்குறுதி அளித்தது. தேர்தல் வாக்குறுதிகளை படிப்படியாக நிறைவேற்றி வந்த திமுக அரசு, கடந்த ஆண்டு செப்டம்பர் 15 ஆம் தேதி இந்த திட்டத்தை செயல்படுத்தியது இந்த திட்டத்தின் கீழ் தற்போது சுமார் 1 கோடியே 16 லட்சத்து 50 ஆயிரம் பேர் பயன்பெற்று வருகிறார்கள். மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் பயன்பெற பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.2.50 லட்சத்திற்கு மேல் இருக்க கூடாது. 5 ஏக்கருக்கு மேல் நன்செய் நிலம் இருக்க கூடாது. ஒரு ஆண்டிற்கு வீட்டு உபயோக மின்பயன்பாடு 3,600 யூனிட்டிற்குள் இருக்க வேண்டும் என்பது உள்ளிட்ட நிபந்தனைகள் உள்ளன. இந்த நிபந்தனைகளால்] மகளிர் பலருக்கு உரிமைத்தொகை கிடைக்கவில்லை. இதனால், நிபந்தனைகள் எதுவும் இன்றி அனைத்து மகளிருக்கும் மாதம் ரூ.1000 வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை எதிர்க்கட்சிகள் எனவே, மகளிர் உரிமை தொகை திட்டம் தொடங்கப்பட்டு ஓராண்டு நிறைவு பெறும் அந்த நாளில், இந்த திட்டம் விரிவுபடுத்துவது தொடர்பாக அறிவிப்பு வெளியாகலாம் என்று அதிகாரிகள் வட்டாரத்தில் சொல்லப்படுகிறது. எனினும் இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வந்தால்தால்தான்..உறுதியான நிலவரம் தெரியும். தற்போது இந்த திட்டத்தில் பயன்பெற தகுதியில்லாதவர்கள் யார் யார் என்பதை இங்கே பார்க்கலாம்.




ரூபாய் இரண்டரை லட்சத்திற்கு மேல் ஆண்டு வருமானம் ஈட்டும் குடும்பங்கள். * குடும்பத்தில் ஆண்டு வருமானம் ரூபாய் 2.50 லட்சத்திற்கு மேல் ஈட்டி வருமானவரி கணக்கு தாக்கல் செய்பவர்கள் மற்றும் வருமான வரி செலுத்துபவர்கள். * ஆண்டுக்கு ரூ.2.5 லட்சத்திற்கு மேல் வருமானம் ஈட்டி தொழில் வரி செலுத்துவோர். * மாநில, மத்திய அரசு ஊழியர்கள் / பொதுத்துறை நிறுவனங்கள் / வங்கிகளின் ஊழியர்கள், வாரியங்கள், உள்ளாட்சி அமைப்புகள், கூட்டுறவு அமைப்புகளின் ஊழியர்கள் மற்றும் அவற்றின் ஓய்வூதியதாரர்கள். * தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் (ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்களைத் தவிர). * சொந்த பயன்பாட்டுக்கு கார், ஜீப், டிராக்டர், கனரக வாகனம் போன்ற நான்கு சக்கர வாகனங்கள் வைத்துள்ளவர்கள். * ஏற்கனவே தொடர் சமூகப் பாதுகாப்புத் திட்ட ஓய்வூதியம் மற்றும் அரசிடமிருந்து ஓய்வூதியம் பெறும் குடும்பங்கள் உள்ளிட்டவர்கள் தற்போது மகளிர் உரிமை தொகை திட்டத்தின் கீழ் பயன்பெற முடியாது என்ற நிபந்தனை உள்ளது.



அரியலூர் நகர அதிமுக சார்பில் அதிமுக கட்சினருக்கு ,கட்சி தலைமை வழங்கிய உறுப்பினர் அட்டை வழங்கும் நிகழ்ச்சி படை பத்து மாரியம்மன் கோவில், சமுதாய கூடத்தில் நேற்று நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அதிமுக செயலாளாரும், முன்னாள் அரசு தலைமை கொறடாவுமான தாமரை எஸ் ராஜேந்திரன் தலைமை ஏற்று நகராட்சிக்குட்பட்ட 18 வார்டு நிர்வாகிகளிடம் , அதிமுக உறுப்பினர் அட்டையினை வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் எம்எல்ஏ ப .இளவழகன், மாவட்ட நிர்வாகிகள் சிவசங்கர், ஜீவா அரங்கநாதன் ஓபி ஷங்கர், ஒ வெங்கடாஜலபதி, நா.பிரேம்குமார், நகரச்செயலாளர் ஏ.பி.செந்தில், வழக்கறிஞர்கள் சிவஞானம், செல்ல. சுகுமார், நகர எம்ஜிஆர் மன்ற செயலாளர் பழனியாண்டி , முன்னாள் நகராட்சி கவுன்சிலர் கருணாநிதி , நகராட்சி கவுன்சிலர் கள்மகாலட்சுமி, இஸ்மாயில், இன்பவள்ளி, நகர நிர்வாகிகள் மற்றும் வார்டு செயலாளர்கள் கலர் கலந்து கொண்டனர்.



கடலூர் மாவட்டம், அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பள்ளவராயநத்தம் ஊராட்சியில் பிரதான் மந்திரி ஜன்மன் திட்டத்தின்கீழ் வீடு கட்டுமானப் பணிகள் நடைபெறுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



மதுரை குட்செட் தெருவில் புதிதாக துவங்கப்பட்டுள்ள பூரணி ஹாஸ்பிடல் சப்ளையர்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் தவா டிரக்ஸ் மார்ட் விற்பனையகத்தை வேலம்மாள் குழும தலைவர் முத்துராமலிங்கம் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார். இந்நிகழ்வில் கே.எம்.சி.எச் குழுமத் தலைவர் டாக்டர் பழனிச்சாமி இயக்குனர்கள் மருத்துவர்கள் தவமணி தேவி, அருண் மற்றும் பிஆர்ஓ சசிக்குமார் உட்பட பலர் உடன் இருந்தனர்.



கோவை ஜெம் மருத்துவமனை நடத்தும் அதிக உடல்பருமனுக்கான மருத்துவ ஆலோசனை முகாம் சேலம் ஐந்து ரோடு இந்தியா மருத்துவ சங்கத்தில் நடைபெற்றது அதிக உடல்பருமன் மற்றும் கட்டுப்பாடற்ற சர்க்கரை நோயால் அவதிபடுகிற பொது மக்களுக்கு இலவச ஆலோசனை நடைபெற்றது இதில உலகப்புகழ் பெற்ற ஜெம் மருத்துவமனையின் சிறப் பு உடல் பருமன் அறுவை சிகிச்சை நிபுணர் பிரவீன் ராஜ் மற்றும் சரவணகுமார் கலந்துகொண்டு முகாமில் கலந்து கொண்ட பொதுமக்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார் இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை முகாம் அலுவலத்தில், மக்கள் நீதி மையத்தின் தலைவர் நடிகர் கமல்ஹாசன் சந்தித்து, முதலமைச்சரின் வெளிநாட்டுப் பயணம் வெற்றி பெற வாழ்த்து தெரிவித்தபோது, அவருக்கு முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு நினைவு நாணயத்தை முதலமைச்சர் வழங்கினார்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் மாவட்டம். வெள்ளகோவில், ஆண்டிபாளையம் பகுதியில் கொங்கு நாடு ரைபிள் கிளப் சார்பில் 50வது தமிழ்நாடு மாநில துப்பாக்கி சுடுதல் போட்டிகளை துவக்கி வைத்தார்.

## தமிழ்நாடு அனைத்து மின் பணியாளர் முன்னேற்ற நல சங்கம் ஈரோடு மாவட்டம் சார்பாக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.



ஈரோடு, தமிழ்நாடு அனைத்து மின் பணியாளர் முன்னேற்ற நல சங்கம் மாநில அளவில் செயல்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டம் சார்பாக தனியார் மஹாலில் உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தலைவர் சேகர், செயலாளர் செல்வகுமார், பொருளாளர் ராஜமாணிக்கம், அமைப்புச் செயலாளர் கனகராஜ், துணைத் தலைவர் ஆல்வின் ஜோசப் ஆகியோர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்த உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நலவாரியத்தில் உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து உறுப்பினர்கள் அறிமுகம் செய்து வைத்து அவர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்த ஆலோசனை கூட்டத்தின் போது உறுப்பினர்களிடம் கருத்துகள் கேட்டு அதற்கு உண்டான விபரங்களையும் தெரிவித்தனர். மேலும் இந்த நலச் சங்கத்தில் இணையும் உறுப்பினர்களுக்கு வழங்கும் பல்வேறு சலுகைகள் பற்றியும் எடுத்துரைத்தனர். இந்த நிகழ்ச்சியில் 30க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர். இந்த நிகழ்ச்சிக்கு வருகை புரிந்த உறுப்பினர்கள் அனைவருக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.


# செய்திகள் மற்றும் விளம்பர தொடர்புக்கு:

# 9842449293

# 9952846293

# கோவை பொள்ளாச்சியில் போதை மருந்து விற்பனையாளர் மீது குண்டர் தடுப்பு சட்டம் பாய்ந்தது.

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் மருத்துவர்கள் பரிந்துரையின்றி போதை ஏற்படுத்தக்கூடிய மருந்துகள் மற்றும் ஊசிகளை விற்பனைக்கு வைத்திருந்த பொள்ளாச்சி பகுதியைச் சேர்ந்த பால்துரை மகன் பாஸ்கரன்@சுதாகரன்(45) என்பவரை பொள்ளாச்சி கிழக்கு காவல் நிலைய காவல் துறையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர். மேலும் பொது ஒழுங்கு மற்றும் பொது சுகாதாரப்




பராமரிப்பிற்கு பாதகமான செயலில் ஈடுபட்ட குற்றத்திற்காக பாஸ்கரன் @சுதாகரன்(45) மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரி.கார்த்திகேயன், பரிந்துரை செய்தார். அப்பரிந்துரையின் பேரில் கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் பாடி, மேற்கண்ட நபர் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பித்தார். அவ்வுத்தரவின் அடிப்படையில் மேற்படி வழக்கில் தொடர்புடைய குற்றவாளியான பாஸ்கரன்@சுதாகரன்(45)யை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்தனர்.

# சோதனை சாவடியில் காவல் கண்காணிப்பாளர் ஆய்வு.

கோவை, ஆகஸ்ட்.26 கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரி.கார்த்திகேயன், கோவையை அடுத்த மதுக்கரை காவல் நிலையம் மற்றும் வாளையார் சோதனை சாவடியை ஆய்வு மேற்கொண்டார். மேலும் மதுக்கரை காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகளை ஆய்வு செய்தார். இத்துடன் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவல்துறையினருக்கு பணிகளைக் குறித்து அறிவுரை வழங்கியும் அவர்களது நிறைகுறைகளை கேட்டு அறிந்தார்.



மேலும் வாளையார் சோதனை சாவடியில் அமைக்கப்பட்டுள்ள சிசிடிவி கேமராக்கள் மற்றும் பேரிக்காட்களை (barricades) ஆய்வு மேற்கொண்டார். இத்துடன் சோதனை சாவடியில் பணியில் உள்ள காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்களுக்கு வாகன சோதனை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் எனவும், பணியில் விழிப்புடன் செயல்பட வேண்டும் எனவும் எடுத்துக் கூறினார்.

# லஞ்சம் வாங்கிய படித்த பட்டதாரி இளம் பொறியாளர் கைது.

திருப்பூர் மாநகராட்சி 4வது மண்டல இளம் பொறியாளராக உள்ளவர் சுரேஷ்குமார், 39. மாநகராட்சியில் ரோடு பணி ஒப்பந்ததாரராக இருப்பவர் கந்தசாமி. இவர் 1.59 கோடி ரூபாய் மதிப்பில் மாநகராட்சி பகுதியில் ரோடு அமைக்க 'டெண்டர்' எடுத்தார். பணிகள் முடிந்ததால், 'பில்' தொகையை வழங்க, ஒப்புதல் தர பொறியாளர் சுரேஷ்குமாரை அணுகினார்இதற்காக, 2



லட்சம் ரூபாய் லஞ்சமாக சுரேஷ்குமார் கேட்டார். அதில் ஒரு லட்சம் ரூபாயை கந்தசாமி கொடுத்து விட்டார். மேலும் ஒரு லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும் என சுரேஷ்குமார் வலியுறுத்தினார். இதன் காரணமாக லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம் புகார் அளித்ததைத் தொடர்ந்து, போலீசார் அறிவுரையின்படி, ரசாயனம் தடவிய ஒரு லட்சம் ரூபாய் பணத்தை, ராயபுரத்தில் உள்ள அலுவலகத்தில் கந்தசாமி, சுரேஷ்குமாரிடம் கொடுத்தார். அப்போது மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார், சுரேஷ்குமாரை கைது செய்தனர்.




தூத்துக்குடி மாவட்டம் கிழவல்லநாட்டில் உள்ள தூத்துக்குடி அரசு மாதிரி பள்ளி மாணவ மாணவியர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கிய புத்தகங்கள் மற்றும் தூத்துக்குடி கனிமொழி வழங்கிய புத்தகங்கள் ஆகியவை பள்ளியில் ஒப்படைக்கப்பட்டது. உடன் தூத்துக்குடி மேயர் பெ.ஜெகன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கணேச மூர்த்தி ஆகியோர் உள்ளனர்.



சேலம்தில் நடிகரும் சமூக சேவாகருமான திருப்பாச்சி, பெஞ்சமின்,மற்றும் கோவையைசேர்ந்த பிரபல ரியல் எஸ்டேட் அதிபர். ஏ.எஸ்.வி. ராபின், இணைந்து சேலம் கோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைபள்ளியில் சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட இடு(சுடு)காடுகளில் பணிபுரியும் மாயான ஊழியர்கள் சுமார் 100க்கும் மேற்பட்டோருக்கு சமபந்தி மத்திய உணவு விருந்து மற்றும் 5 கிலோ அரிசி மற்றும் நிவாரண உதவிகள் வழங்கினர் உடன் ஜம் ஜம் ஹெல்மெட், காசிம் உட்பட பலர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.




செந்துறை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் மேலாண்மை குழு தேர்வில் தலைமையாசிரியர் சுமதி தலைமையில் தலைவர் துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர் இதில் பெற்றோர்கள் முன்னால் மாணவர்கள் முன்னாள் ஆசிரியர்கள் கலந்து கொண்டன.

# ஒட்டன்சத்திரத்தில் மாமன்னர் சாலியவாகணன் தெலுங்கு குலாலா சமுதாய அறக்கட்டளையின் முப்பெரும் விழா



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தனியார் மண்டபத்தில் மாமன்னர் சாலியவாகணன் தெலுங்கு குலாலா சமுதாய நல அறக்கட்டளையின் சார்பில் முதலாம் ஆண்டு முப்பெரும் விழா இவ்விழாவில் மாணவ மாணவிய செல்வங்களுக்கு கல்வி ஊக்கபரிசு வழங்குதல் மண்பாண்ட கலைஞர்களை கௌரவ வித்தல் ஆதரவற்ற முதியோர்களுக்கு உதவித்தொகை வழங்குதல் எனும் முப்பெரும் விழா மாமன்னர் சாலியவாகணன் தெலுங்கு குலாலா சமுதாய நல அறக்கட்டளையின் தலைவர் எம்.சண்முகம் கௌரவ தலைவர் பி.கே.வேலுச்சாமி துணைத்தலைவர் ஏ.பால்ராஜ் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் எம்.திவ்யா வரவேற்றார் கே.மனோகரன்,பி.பொன்னுச்சாமி,எம்.பெருமாள்,கே.கந்தவேல்,ஆர்.கணேசன்,சி.முருகேசன்,பி.முனியாண்டி,எம்.நாட்ராயன்,ஏ.தங்கராஜ்,பி.ராமசாமி,எம்.ராமசாமி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொருளாளர் கே.குழந்தைவேல் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தார். செயல் அறிக்கை செயலாளர் கே.எஸ்.கே. நாகராஜ் வாசித்தார்.இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சென்னை முன்னாள் மேதகு ஜனாதிபதி ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அறிவியல் ஆலோசகர் டாக்டர் வி.பொன்ராஜ் நடப்பு அரசியல் விழிப்புணர்வும் மாணவ மாணவிகளின் எதிர்கால கனவும் பற்றி சிறப்புரை ஆற்றினார். பின்பு 10ஆம் வகுப்பு,12ஆம் வகுப்பு வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசு, பாராட்டு கேடயங்களும் வழங்கப்பட்டது. மண்பாண்ட கலைஞர்களுக்கு கௌரவித்தனர் மேலும் ஆதரவற்ற முதியோர்களுக்கு உதவித்தொகை வழங்குதல், விபத்து நிவாரண உதவி வழங்குதல் சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவுப்பரிசு வழங்குதல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது இதில் மாணவ மாணவிகளின் நடன கலைநிகழ்ச்சிகளும் அரங்கேற்றம் செய்தனர் நிகழ்ச்சியின் நிறைவில் எஸ்.காளிதாஸ் நன்றி தெரிவித்தார் இந்நிகழ்ச்சிக்கு தெலுங்கு குலால சமுதாய பெண்கள் ஆண்கள் குடும்பம் குடும்பங்களாக பெருந்திரளானோர் பங்கேற்றனர்.



மெரினா கடற்கரையில், அமைச்சர் உதயநிதி, அமைச்சர் கே. என். நேரு தலைமையில், மா. சுப்பிரமணியன் முன்னிலையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் "ரம்ம மெரினா நம்ம பெருமை" என்ற விழிப்புணர்வு இயக்கத்தின் தொடக்க விழாவில், மெரினா மற்றும் பெசன்ட் நகர் கடற்கரையில் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கான அதிநவீன கடற்கரை மோட்டார் வாகனங்களின் சேவையை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துணை மேயர் மகேஷ் குமார். நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெகுமாகுருபான், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் பி.ஜெயசந்திரன் நிலைக்குழுத் தலைவர் மதன்மோகன், துணை ஆணையர் பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்த மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ. பிரவீன் நிலைக்குழுத் தலைவர்கள் க.தனசேகாள் கணக்கு, டாக்டர் கோ சாந்தகுமாரி (பொதுககாதாரம். சர்ப்ஜெயாதாஸ் நரேந்திரன் (வரிவிதிப்பு நிதி, இளையஅருணா (நகரமைப்பு, நியமனக் குழு உறுப்பினர்கள் . இராஜ அன்பழகள், சொ.வேலு, மாமன்ற ஆளுங்கட்சித் துணைத் தலைவர் .காமராஜ் மாமன்ற உறுப்பினர்கள், தலைமைப் பொறியாளர் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருவள்ளூரில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பாக விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டம்




திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பாக விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் த.பிரபுசங்கர் தலைமை தாங்கினார். கூட்டத்தில் வேளாண்மைத்துறை மூலம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், வேப்ப மரக்கன்று. நெல் தூயமல்லி மற்றும் திரவ உயிரி உரம், மாநில தோட்டக்கலை வளர்ச்சி திட்டத்தில் மா கன்றுகள் மற்றும் வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத் திட்டத்தின் கீழ் வேளாண் உட்கட்டமைப்பு நிதி ஆகியவற்றின் கீழ் 7 விவசாயிகளுக்கு ரூ.3.62,700க்கு மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார். திருவள்ளூர் மாவட்டத்தில் 12000 ஏக்கரில் ரூ.1.20 கோடி மானியத்தில் பசுந்தாள் உர பயிர் பயிரிட திட்டமிடப்பட்டு விவசாயிகளுக்கு வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் பசுந்தாள் உர விதைகள் ஒரு கிலோ முழு விலையாக ரூ.99.50 இதில் 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 3611 ஏக்கருக்கு 72.22 மெ.டன் பசுந்தாள் உரவிதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு வேளாண்மை துறையின் கீழ் ரூ. 363.08 கோடி பயிர் இழப்பீடு தொகை 1,63,346,கடந்த ஆண்டுகளில் விவசாயிகளின் தவறான வங்கி கணக்குகள் பதிவேற்றம் செய்யப்பட்டதால் வழங்கப்படாமல் விடுபட்ட 7659 விவசாயிகளுக்கு ரூ.14.4962 கோடி இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. பி.எம்.கிசான் திட்டத்தில் பதிவு செய்யாமல் விடுபட்ட விவசாயிகள் மற்றும் கிசான் கடன் அட்டை பெறாத விவசாயிகள் ஆகியோர் உரிய ஆவணங்களுடன் தங்கள் கிராம அளவிலான செயல் அலுவலர்களை அணுகி பி.எம்.கிசான் இணையதளத்தில் (https://pmkisan.gov.in/) பதிவு செய்யும் முறையை கேட்டறிந்து உடனடியாக பதிவு செய்யவும், கிசான் கடன் அட்டை பெற விண்ணப்பிக்கலாம். திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் எல்லைக்குட்பட்ட பகுதியில், பதிவு செய்யப்படாமல் விடுபட்டுள்ள விவசாயிகள் கரும்பு பரப்பினை பதிவு செய்ய வேண்டும் என தெரிவித்தார். இக்கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் கா.முருகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஜெ.மோகன், நிர்வாக இயக்குநர், கூட்டுறவு சர்க்கரை ஆலை, மண்டல மேலாளர். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம். மற்றும் பல்வேறு துறைகளின் மாவட்ட அலுவலர்களும் 150க்கும் மேற்பட்ட விவசாயிகளும் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் "எல்லோருக்கு எல்லா கிடைக்க வேண்டும் " என்ற உயர்ந்த நோக்கத்தோடு இந்து சமய அறநிலை துறைக்கு எடுக்கும் அனைத்து முடிவுகளுக்கும் அனைத்து தரப்பு மக்களும் ஏற்றுக் கொள்ளும் நிகழ்வாக இருப்பதற்குச் சான்று இந்த அனைத்து உலக முத்தமிழ் முருகன் மாநாடு வெற்றி இரண்டாம் நாளாக நடைபெறும் அனைத்து உலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் வழிகாட்டுதல்படி வரலாற்று சிறப்புமிக்க 16 தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகிறது



திருப்பத்தூர் மாவட்ட டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா முன்னிட்டு நடைபெற்ற பேச்சு போட்டியை செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தொடங்கி வைத்து, போட்டியில் பங்கேற்ற மாணவ மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ்கள் வழங்கி சிறப்பித்தார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீ.வடிவேல் அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன், மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், தலைமை செயற்குழு உறுப்பினர் கு.ராஜமாணிக்கம், மு.அசோகன், கந்தல மேற்கு ஒன்றிய செயலாளர் கே.முருகேசன், மாவட்ட இளைஞரணி து.அமைப்பாளர்கள் வி.வி.கிரிராஜ், சி.செந்தில்குமார், நா.பெ.பிரபு, எஸ்.தமிழ்மணி மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உடன் இருந்தார்கள்.

# பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் மாவட்ட கண்காணிப்பாளர் ஆய்வு



பொள்ளாச்சி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில், கோவை மாவட்ட எஸ்.பி., கார்த்திகேயன், டி.எஸ்.பி., ஜெயச்சந்திரன் மற்றும் போலீசார், அரசு மருத்துவமனையை ஆய்வு செய்தனர். ஆய்வின் போது, இரவு நேரத்தில் கட்டடங்களுக்கு பின்புறம் எங்கெல்லாம் அதிக வெளிச்சம் தேவைப்படுகிறது; எங்கு கூடுதலாக கண்காணிப்பு கேமராக்கள் தேவைப்படுகிறது என, ஆய்வு செய்தனர். மருத்துவ மாணவர்கள், டாக்டர்கள் இரவு நேரத்தில் செல்லும் பகுதிகளில் கூடுதல் மின் விளக்குகள், கூடுதல் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த வேண்டும் என, மருத்துவமனை கண்காணிப்பாளர் ராஜாவிடம், எஸ்.பி., ஆலோசனை நடத்தினார். தொடர்ந்து, அவசர சிகிச்சை பிரிவுக்கு கூடுதலாக போலீசார் தேவைப்பட்டால், அருகே உள்ள போலீஸ் ஸ்டேஷனில் இருந்து அனுப்பிவைக்கவேண்டும் என போலீசாருக்கு அறிவுறுத்தினார். புறக்காவல் நிலையத்தில் அதிகமான போலீசாரை நியமிக்க வேண்டும்; இரவு நேர காவல் ரோந்தில், போலீசார் குறைந்த பட்சம் மூன்று முறையாவது மருத்துவமனை வளாகத்துக்குள் வந்து செல்ல வேண்டும். மருத்துவமனையில் இருந்து புகார்கள் வந்தால், உடனடியாக விசாரிக்க வேண்டும் என, போலீசாருக்கு அறிவுறுத்தினார்.

# இந்திய ஜனநாயக கட்சியின் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டம் சார்பில் பாரிவேந்தர் 85 வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது

திண்டுக்கல், ஆகஸ்ட்.25 திண்டுக்கல் இந்திய ஜனநாயக கட்சியின் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டம் சார்பில் பாரிவேந்தரின் 85 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அதனைக் கொண்டாடும் விதமாக திண்டுக்கல் இந்திய ஜனநாயக கட்சியின் ஒருங்கிணைந்த மாவட்ட தலைவர் சி.ரஞ்சித்குமார், மேற்கு மாவட்ட தலைவர் இ.அசோக்ராஜ் ஆகியோர் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட செயலாளர் வி.ஸ்ரீராம் முன்னிலை வகித்தார். இதில் மாவட்ட துணை செயலாளர் ஆர்.கார்த்திகேயன், மாவட்ட துணைதலைவர் அட்டு சரவணன், மாவட்ட மகளிர் அணி செயலாளர் சிவரஞ்சனி, மாநகர இளைஞரணி செயலாளர்



வெற்றி, மாவட்ட மருத்துவ அணி செயலாளர் கார்த்திகேயன் நேசப்பிரியா, மாநில கலைத்துறை தலைவர் ஜி.டி. ரவி மற்றும் இந்திய ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் சார்பாக திண்டுக்கல்லில் பிரசித்தி பெற்ற வெள்ளை விநாயகர் திருக்கோவிலில் ஐயா பாரிவேந்தர் பெயரில் அர்ச்சனை செய்தும் விசேஷ பூஜைகள் செய்தும் கொண்டாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு அன்னதானமும், இனிப்புகளும் வழங்கி திண்டுக்கல் மாவட்டத்தின் சார்பாக பாரிவேந்தர் பிறந்தநாள் விழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.

# பொள்ளாச்சியில் அறிவுச்சோலை கல்வி விழிப்புணர்வு.



பொள்ளாச்சி, ஆகஸ்ட்.25 பொள்ளாச்சியை அடுத்த பில்சின்னாம்பாளையம் அறிவுச்சோலை கல்வி விழிப்புணர்வு மையத்தில் பள்ளி மாணவர்களின் திறமைகளை ஊக்கப்படுத்தும் வகையிலும், சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கும் வகையிலும், பில்சின்னாம்பாளையம் கிருஷ்ணா மகாலில் விழா நடந்தது விழாவுக்கு அறிவுச்சோலை கல்வி விழிப்புணர்வு மையத்தின் நிறுவனர் அம்சப்ரியா தலைமை வகித்தார். விழா அமைப்பாளர் ராமகிருஷ்ணன் வரவேற்றார். அமைப்பின் பொறுப்பாளர் ராமலிங்கம் அமைப்பின் நோக்கங்களையும், எதிர்கால செயல்பாடுகளையும் விளக்கினார். பள்ளி மாணவர்களின் திறமைகளைக் கொண்டாடும் வகையில், ஓவியம், கட்டுரை, நடனப்போட்டிகள் நடைபெற்றன. ஊராட்சி தலைவர் சுமதி, பரிசுகளை வழங்கினார். பொள்ளாச்சி இலக்கிய வட்டத்தின் செயலாளர் பூபாலன், கவிஞர்கள் வேல்கண்ணன், இளங்கோ, பெரியசாமி ஆகியோர் பேசினர். கவிஞர் ஜெயக்குமார், அறிவுச்சோலை விழிப்புணர்வு மையத்தின் நீண்ட காலச் செயல்பாடுகள் குறித்து பேசினார். பேச்சாளர் சுடர்விழி, மாணவர்களுக்கு விழிப்புணர்வு உரையாற்றினார் தொடர்ந்து, திருக்குறளை மக்களுக்கு உணர்த்தும் வகையில் திருக்குறள் செய்திப் பலகையை திருக்குறள் ஆர்வலர் செந்தில்குமார் திறந்து வைத்தார். அமைப்பாளர் காளிங்கராஜ், திருக்குறள்களை கூறி கருத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். கவிஞர் காளிமுத்து நன்றி கூறினார்.

# சன்பீம் பள்ளி விளையாட்டு விழா; மாணவர்கள் விளையாட்டிலும், கல்வியும் சிறந்து விளங்க வேண்டும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மணிமொழி பேச்சு



காட்பாடி, சன்பீம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி ஆண்டு விளையாட்டு விழா நேற்று நடந்தது. விழாவிற்கு சன்பீம் பள்ளி குழுமத் தலைவர் ஹரிகோபாலன் தலைமை தாங்கினார். பள்ளி தாளாளர் தங்கப்பிரகாஷ், துணைத்தலைவர் டாக்டர் ஜார்ஜ் அரவிந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி மாணவர் தலைவர் ஜஸ்வந்த் ஸ்ரீநிவாஸ் வரவேற்றார். விளையாட்டு ஆண்டு அறிக்கையை 11 ஆம் வகுப்பு மாணவி மனிஷா தொகுத்து வழங்கினார். பள்ளி முதல்வர் ஜெயராஜ் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார். சிறப்பு விருந்தினராக வேலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மணிமொழி கலந்துகொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு கோப்பை வழங்கி பேசினார். அப்போது அவர் பேசுகையில், நாம் மகிழ்ச்சியாக இருக்கும் நாள் தான் விளையாட்டு விழா. இது நமக்கான நாள். இதனை பார்க்கும் போது என்னுடைய பள்ளி நாட்கள் ஞாபகத்திற்கு வருகிறது. விளையாட்டு உடல் ஆரோக்கியத்தையும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையையும் நமக்கு தருகிறது. எனக்கு பிடித்த செயல் போல எனக்கு பிடித்த விளையாட்டு என நீங்கள் விளையாட வேண்டும். நிறைய பெற்றோர்கள் தங்களுடைய மகன் அல்லது மகள் நல்ல கல்வி கற்று கல்லூரிக்கு சென்று நல்ல பணிக்கு செல்ல வேண்டும் என விரும்புகின்றனர். ஆனால் மாணவர்கள் விளையாட்டுத் துறையிலும் உச்சம் அடைய வேண்டும் என்று நினைக்கும் பெற்றோர்களுக்கு என்னுடைய பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் விளையாட்டில் மட்டுமல்லாமல் கல்வியிலும் சிறந்து விளங்க வேண்டும். சிரிக்கும் போதும், கைதட்டும் போதும் நோய் நமக்கு வராது. மகிழ்வை மட்டும் தக்க வைத்து வாழ, வளர வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார். பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் முதல் இடம் பிடித்த மார்பல் அணிக்கு வெற்றிக் கேடயம் வழங்கப்பட்டது. விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 217 மாணவர்களுக்குப் பதக்கங்களும் கோப்பைகளும் வழங்கப்பட்டன. ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் பட்டம் ரிஷி, பூவரசி, கிரண்குமார், நந்தினி, தனுஷ், பிரதிக்க்ஷா ஆகியோருக்கு வழங்கப்பட்டது. விளையாட்டுப் போட்டிகளில் வென்ற 115 ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள், ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், பெற்றோர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.




கன்னியாகுமரி மாவட்டம், நூருல் இஸ்லாம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தேசிய விண்வெளி நாள் (National Space Day) நிகழ்ச்சியில் கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தரவதனம் கலந்து கொண்டு மாணவர்களிடையே சிறப்புரையாற்றினார். பல்வேறு நிலைகளில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி பாராட்டினார். மேலும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் குற்றவியல் நீதி அமைப்பில் (Crimin l Justice System) தடய அறிவியலின் (Forensic Science) பங்களிப்பு குறித்து மாணவர்களிடையே கலந்துரையாடினார்.

# பெரியகுளம் அருகே தோட்டக்கலை கல்லூரியில் துல்லிய வேளாண் கண்காட்சி



தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், வேளாண் துறை கண்காட்சி நடைபெற்றது. இந்த கண்காட்சியை தமிழ் நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவன இயக்குனர் அம்பலவாணன் ஐஏஎஸ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, துவக்கி வைத்தார். இந்த கண்காட்சியில் பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் முதல்வர் ராஜாங்கம் வரவேற்புரை ஆற்றினார். பெரியகுளம் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தக நிறுவன தலைமை நிர்வாக அதிகாரி வசந்தன் செல்வம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக வேளாண் வணிக வளர்ச்சி இயக்குனர் முனைவர் சோமசுந்தரம் ஆகியோர், தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண் துறை ஆகியவற்றில் சொல்லிய பண்ணையம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த உற்பத்தி முறைகளின் தேவைகளை விவசாயத்தில் பயன்படுத்துதல் மற்றும் அதன் அவசியம் குறித்து எடுத்துரைத்தனர். இந்த கண்காட்சியில், 35 க்கும் மேற்பட்ட விவசாய தொழில்நுட்ப இயந்திரவியல் தீர்வுகள், பிந்தைய அறுவடை தொழில்நுட்பங்கள், கரிம தோட்டக்கலை உள்பட பல்வேறு அரங்குகள் அமைக்கப்பட்டு, காட்சிப்படுத்தப்பட்டன. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் விவசாய பெருமக்கள் மற்றும் தொழில் முனைவோர், தோட்டக்கலை கல்லூரி மாணவ மாணவியர் கண்காட்சி அரங்குகளை கண்டு ரசித்தனர்.

# உலகின்மிகப்பெரிய வணிக பயிற்சி நிறுவனம்'ஆக்க்ஷன்கோச்'தமிழகத்தில் துவக்கம்




சென்னை,ஆகஸ்ட்.25 சென்னை தனியார் நட்சத்திர விடுதியில் ஆக்க்ஷன் கோச் என்ற உலகின் மிகப்பெரிய வணிக பயிற்சி நிறுவனம் தமிழகத்தில் துவங்கப்பட்டது. இதில் பிரான்சிஸ் இந்தியா நிறுவனர் மற்றும் தலைவர் கௌரவ்மரியா முன்னிலையில் தமிழகத்தின் ஆக்க்ஷன் கோச் பார்ட்னரும்,தொடர் தொழில் முனைவோருமான சுனில் சேத்தியா அவர்கள் நிறுவனத்தை பற்றி கூறியது அதிரடி பயிற்சிகள் வணிகங்களை உருவாக்க உதவுவது மட்டுமல்லாமல் நிர்வாக பயிற்சியிலும் கவனம் செலுத்துகிறது, வணிகம் (ம) தனிநபர் தொடங்கும் நிறுவனங்கள் முதல் நிர்வாகிகள் வரை அவர்களின் பயிற்சி திட்டங்கள் மற்றும் சவால்களை அடையாளம் காணவும் நடைமுறை மற்றும் முடிவு சார்ந்த தீர்வுகளை பயன்படுத்தவும் பயிற்சியில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றார். இந்தியாவில் 21 மாநிலங்களில் நிறுவனம் செயல்படுகிறது 138 பயிற்சியாளர்கள் ஒவ்வொரு வாரமும் 650 வாடிக்கையாளர்களை யும் வணிகத்தையும், நிர்வாகத்தையும் உருவாக்கினார்கள். உலக அளவில் 99 நாடுகளில் 3000க்கும் மேற்பட்ட பயிற்சியாளர்கள் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. நிறுவனத்தில் ஒரு நாள் மற்றும் இரண்டு நாள் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகிறது.அதில்தொழில் சார்ந்த திட்டங்களை அறிந்து பயன் பெறலாம் என்று தெரிவித்தார். உடன் ஜஹாங்கீர் அகமது, ஹாஃபிஸ் பாஷா, சுனிதா தீபக், சுபாஷ் யூஎன், ராகவ் கௌஷிக்ஆர் இருந்தனர்.



மதுரை திருமங்கலம் தெற்குதெரு வரை 6 கிலோ மீட்டர் தூரத்திற்கு இந்த விழிப்புணர்வு மாரத்தான் போட்டி நடைபெற்றது.5 வயது முதல் 60 வயது வரை அனைவரும் போட்டியில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டது இதனை தொடர்ந்து நேற்று காலை ஆறு மணிக்கு அம்மா மக்கள் முன்னேற்ற கழக மாநில மாணவியர் அணி செயலாளர் ஜீவிதா நாச்சியார் தலைமையில் நடைபெற்ற இந்த மாரத்தான் போட்டியை மதுரை தெற்கு புறநகர் மாவட்ட செயலாளர் டேவிட் அண்ணாதுரை கொடியசைத்து துவக்கி வைத்தார். மாணவ மாணவியர்கள் பெண்கள் முதியவர்கள் என ஆயிரக்கணக்கான பேர் இந்த போட்டியில் பங்கேற்றனர். வீரர்கள் கூத்தியார்குண்டு விலக்கிலிருந்து கப்பலூர் தொழிற்பேட்டை, கப்பலூர் மறவன்குளம் வழியாக திருமங்கலம் தெற்கு தெருவை வந்து அடைந்தனர் ஐந்து வயது முதல் 12 வயது வரையும் , 12 வயதுக்கு மேல் 60 வயது வரையிலும் ஆண்கள் பெண்கள் என தனி தனி பிரிவாக போட்டி நடத்தப்பட்டது. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தெற்கு தெருவில் உள்ள காந்தி சிலை அருகே நடைபெற்ற விழாவில் பரிசுத்தொகை சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

# சேலம் கருங்கல்பட்டியில் கிழக்கு முனியப்பன் கோயில் கும்பாபிஷேக விழா

சேலம், ஆக.25 சேலம் கருங்கல்பட்டி களரம்பட்டி மெயின் ரோடு எண்.4ல் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ கிழக்கு முனியப்பன் கோயில் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்றது. முன்னதாக கடந்த 18ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை முகூர்த்தக்கால் நடுதல், முளைப்லிகை இடுதல், கங்கணம் கட்டுதல் நிகழ்ச்சிகள் நடைபெற்றது. வியாழக்கிழமை 22ஆம் தேதி காலை 9 மணிக்கு கலச தீர்த்த குடம் முளைப்பாளி ஊர்வலம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து முதல்கால யாக பூஜை நடைபெற்றது வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு மங்கள இசையுடன் இரண்டாம் கால யாக வேள்வி நடைபெற்றது. காலை 9 மணிக்கு யாகசாலையில் இருந்து கடம் புறப்பாடு, யாத்திரா தானம், ஸ்ரீ கிழக்கு முனியப்பன் சுவாமிக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்னர்



மூலவருக்கு சிறப்பு ராஜ அலங்காரம் செய்து நெய்வேத்தியம் செய்யப்பட்டது. பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இரவு 7 மணிக்கு ஸ்ரீ கிழக்கு முனியப்பன் சுவாமி திருவீதி உலா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஸ்ரீ கிழக்கு முனியப்பன் கோயில் கும்பாபிஷேக திருப்பணி கமிட்டி தலைவர் ஆர்.வி.பாபு, துணைத் தலைவர்கள் ஆர்.தயாளன், வெங்கடேசன், செயலாளர் ஜெகதீசன், துணைச் செயலாளர்கள் சந்திரசேகரன், சண்முகம், சுந்தரம், ஒபுளிராஜ், சதாசிவம், கோபால், பொருளாளர் பாலு என்கின்ற பாலகிருஷ்ணன், கோயில் பூசாரி அண்ணாமலை மற்றும் கமிட்டி உறுப்பினர்கள் சிறப்பாக செய்திருந்தனர். இந்த கும்பாபிஷேக விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக இந்திரா டையிங் கந்தசாமி, எல்.ஐ.சி. சூரிய நாராயணன், முத்தமிழ் செல்வம், ஓடெக்ஸ்.இளங்கோவன், அண்ணாதுரை, சண்முகம், ராஜேந்திரன், திருப்பதி டெக்ஸ் தங்கராஜ், கோல்டு தேவராஜ், விஜய் ஆனந்த், கல்லாங்காடு சரவணன், கோகுல், சுகவனேஷ், செல்வம், கவுன்சிலர் சீனிவாசன், கிரில் சரவணன் உள்ளிட்டவர்கள் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டனர்.

# திமுக பொது உறுப்பினர்கள் கூட்டம்



குடியாத்தம் வடக்கு ஒன்றியம் சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய அவைத்தலைவர் சேகர் தலைமையில் வடக்கு ஒன்றிய செயலாளர் .சத்தியானந்தம் வரவேற்பில் நடைபெற்றது இக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர்களாக வேலூர் மாவட்ட கழக செயலாளர் திரு.ஏ.பி.நந்தகுமார் அவர்கள் கழக அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாநில தலைவர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் அவர்களும் கலந்துக்கொண்டு சிறப்புரையாற்றினார்கள் உடன் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு விஜயன் அவர்கள் மாவட்ட துணை செயலாளர்கள் பாண்டியன் அரசு ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், மாவட்ட கவுன்சிலர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் மற்றும் பலர் கலந்துக்கொண்டனர்.

# பல்லடம் பொள்ளாச்சி நான்கு வழி சாலை ஆய்வு.



பல்லடம் பொள்ளாச்சி நான்கு வழி சலை பணிக்கான ஆய்வு நடைபெறுகிறது. பொள்ளாச்சி நெடுஞ்சாலை கோட்டம், கிணத்துக்கடவு நெடுஞ்சாலை உட்கோட்டம், சுல்தான்பேட்டை பிரிவுக்கு உட்பட்ட பல்லடம் பொள்ளாச்சி ரோட்டில், காமநாயக்கன்பாளையம் முதல் சுல்தான்பேட்டை வரை மற்றும் அரசூர் பிரிவு முதல் வடசித்தூர் பிரிவு வரை இருவழிப்பாதையில் இருந்து நான்கு வழிச்சாலையாக விரிவாக்கம் செய்யப்படுகிறது. அதில், காமநாயக்கன்பாளையம் முதல் சுல்தான்பேட்டை வரையிலான பகுதியில் முதற்கட்ட தார் ரோடு போடுதல் பணி மற்றும் மையத்தடுப்பு அமைத்தல் பணி நிறைவடைந்துள்ளது. அரசூர் பிரிவு முதல், வடசித்தூர் பிரிவு வரையிலான சாலையில் வலதுபுறம் உள்ள பகுதி ஜல்லி கலவை பரப்புதல் பணி நிறைவடைந்துள்ளது. மையத்தடுப்பு அமைத்தல் பணி துவங்கப்பட உள்ளது. இப்பணியை கோவை நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு பொறியாளர் ரமேஷ், ஆய்வு செய்து, அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார். வேலைகளை விரைவாகவும், தரமாகவும் மேற்கொள்ள அறிவுறுத்தினார். ஆய்வின் போது, பொள்ளாச்சி கோட்ட பொறியாளர் சரவணசெல்வம் மற்றும் கிணத்துக்கடவு, சுல்தான்பேட்டை அதிகாரிகள் உடன் இருந்தனர்.



வால்பாறை, பன்னிமேடு பங்களா டிவிஷன், தமிழக கேரள எல்லையில் உள்ளது. இங்குள்ள பயணியர் நிழற்கூரையை புதர் சூழ்ந்துள்ளது. இதனால், பயணியர் பயன்படுத்த முடியாமல் அவதிப்படுகின்றனர். இரவு நேரத்தில் சிறுத்தையும், பகல் நேரத்தில் பாம்புகளும் புதருக்குள் தஞ்சமடைகின்றன. எஸ்டேட் பகுதி மக்களின் நலன் கருதி, பயணியர் நிழற்கூரையை இடித்து, நவீன முறையில் புதியதாக கட்ட வேண்டும். அப்பகுதியில் உள்ள புதரை அகற்றி, துய்மையாக பராமரிக்க வேண்டும். பொதுமக்கள் கூறுகையில், 'கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக பயணியர் நிழற்கூரை பழுதடைந்துள்ளது. சமீப காலமாக புதர் சூழ்ந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மக்கள் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, நிழற்கூரையை புதிதாக கட்டவும், புதர் அகற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்,' என்றனர்.

# சாணக்யா ரிப்போர்ட்டர்

மாதம் இருமுறை இதழ்

மலர் 3 இதழ் 17 செப்டம்பர் 01-15

**ஆசிரியர் – வெளியீட்டாளர்**
M.முகமது இக்பால் M.Com.,

**உதவி ஆசிரியர்கள்**
A.சுரேஷ் ராஜா M.B.A சென்னை
A.கனகராஜ் கோயம்புத்தூர்

**தலைமை நிருபர்**
M.தமிழரசன் திருச்சி

**நிருபர்கள்**
B.ஷாகுல் ஹமீது, திருச்சி, S.ஷண்முக சுந்தரம், ஈரோடு
P.ரமேஷ், திருப்பூர் L.பாபு திருச்சி

**சட்ட ஆலோசகர்**
S.சாய்நாதன், M.Com,B.L.,
நோட்ரி பப்ளிக்

**நிர்வாக அலுவலகம்**
Plot No: 25, வள்ளலார் நகர் ,
எசனைகோரை, கீழாவளாடி,திருச்சி 621218
Contact No: 98424 49293,99528 46293
Mail : chanakyareporternews@gmail.com
Web : www.chanakyareporter.com



**விளம்பரம் மற்றும் செய்தி தொடர்புக்கு:**
**98424 49293, 99528 46293**




ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு சேர்ந்த கௌசல்யா சேகரன் என்பவர் ஆன்லைன் மோசடியில் பணத்தை இழந்ததாக கொடுத்த புகாரின் பேரில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி, உத்தரவின் பேரில் இணைய வழி குற்றப்பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் குமார் வழிகாட்டுதலின்படி உதவி ஆய்வாளர் தியாகராஜன் தலைமையிலான போலீசார் ஆன்லைனில் இழந்த பணத்தை ரூ. 3,08,730 மீட்டு கௌசல்யா சேகரன், எனபவரிடம் ஒப்ப டைக்கப்பட்டது.

# வாரியாருக்கும் விஜயகாந்த்க்கும் பிறந்த தேதி ஒரே தேதி.



சென்னை, திருமுருக கிருபானந்த வாரியார் பிறந்த நாளும் திரைப்பட நடிகரும் தேசிய முற்போக்கு திராவிட கழக கட்சியின் நிறுவனத் தலைவருமான விஜயகாந்த் அவர்களின் பிறந்த நாளும் வருடங்கள் மாறி இருந்தாலும் அல்லது முன் பின் இருந்தாலும் தேதி ஒன்றுதான் அதுதான் ஆகஸ்ட் 25 என்பது குறிப்பிடத்தக்கது. மறைந்த தேமுதிக தலைவரும் பொதுச் செயலாளருமான விஜயகாந்தின் 72 ஆவது பிறந்தநாள் நேற்று கொண்டாடப்பட்டது. அவர் இறப்பிற்கு பிறகு வரும் முதல் பிறந்தநாள் அது. இதையொட்டி சென்னை கோயம்பேட்டில் உள்ள தேமுதிக தலைமை அலுவலகத்தில் உள்ள அவரது நினைவிடம் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. காலை முதலே ஏராளமான தொண்டர்கள் விஜயகாந்தின் நினைவிடத்தில் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தி வருகிறார்கள் ஒவ்வொரு முறையும் விஜயகாந்தின் பிறந்தநாள் விழா வறுமை ஒழிப்புத் தினமாக கொண்டாடப்படும். அது போல் அவருடைய பிறந்தநாளில் எம்ஜிஆர் ஜானகி காது கேளாதோர் பள்ளிக்கு நலத்திட்ட உதவிகளையும் உணவையும் தேமுதிக தலைவர் விஜயகாந்த் வழங்கி வந்தார் அந்த வகையில் நேற்றயதினமும் அவர் பிறந்தநாளையொட்டி நலத்திட்ட உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. தேமுதிக தலைமை அலுவலகத்திற்கு காலை முதலே கட்சியினர் திரண்டு வண்ணமலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்ட அவருடைய நினைவிடத்தில் மரியாதை செலுத்தி வருகிறார்கள். இந்த நிலையில் விஜயகாந்தின் நினைவிடத்தில் அவருடைய ஆள் உயர சிலை திறக்கப்பட்டுள்ளது. விஜயகாந்தின் பிறந்தநாளை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய பிரேமலதா விஜயகாந்த் கண்ணீர் மல்க, விஜயகாந்த் சிலையை திறந்து வைத்தார். பின்னர் அந்த சிலையை தொட்டு பார்த்து பிரேமலதா கண்ணீர் விட்டார். அவருடன் அவரது மகன் இருவருமே கண்ணீர் விட்டு அழுதனர். பிறகு அவரது சிலைக்கு கற்பூர ஆரத்தி காட்டப்பட்டது. இதையடுத்து அங்கு வந்த தொண்டர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. அங்கு கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இந்த கூட்ட நெரிசலாலும் ஏற்கெனவே தந்தையை நினைத்து கண் கலங்கியதாலும் சண்முகபாண்டியனுக்கு திடீரென மயக்கம் ஏற்பட்டது. இதையடுத்து அவரை பாதுகாப்பாக அழைத்து காரில் உட்கார வைத்து மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். விஜயகாந்தின் சிலை அழகாக சிரித்தபடியே இருந்தது தொண்டர்களை நெகிழச் செய்தது. ஆனாலும் முகத்தில் கம்பீரம் குறையவில்லை. தம்ஸ் அப் காட்டியபடி சிலை இருந்தது. இதையடுத்து விஜயகாந்தின் கனவுகளை நிறைவேற்றுவோம் என அனைவரும் உறுதிமொழியேற்றனர்.



தேனி மாவட்டம் பெரியகுளம் கும்பக்கரை அருவி தேவதானப்பட்டி வனச்சரகம், கொடைக்கானல் வனச்கோட்டம் திண்டுக்கல் வனமண்டலம் மற்றும் சூழல் சுற்றுலா மேம்பாட்டுக் குழு மக்கள் பங்கேற்பு திட்டம், மறு கூராய்வு நுண்செயல்திட்டம் தயாரித்தல் கூட்டம் நடைபெற்றது.எ.புதுக்கோட்டை நேரு நகரில் இருக்கும் இந்திரா காலனி தெருவிற்கு வனக்குழு அதிகாரிகள், பொது மக்களுக்கு பயன்படும் வகையில் தாவரங்கள்,சுற்றுச்சூழல்கள், வன விலங்குகள்,அழிந்து வருவதை பற்றியும், பொது மக்களுக்கு வனக்குழு அதிகாரி அன்பழகன், அவர்கள் எடுத்து உரைத்தனர். இந்திரா காலனி தெருவில் இருக்கும் அனைத்து மக்களின் குறைகளையும் கேட்டறிந்தார். மற்றும் சமுக நல விழிப்புணர்வு, கிராம வளர்ச்சி அறக்கட்டளை (SwARD TRUST ) தெந்தூர், மதுரை,மற்றும் மாவட்ட வன அலுவலர் கொடைக்கானல் வனக்கோட்டம் , தேவதானப்பட்டி பெரியகுளம்.

Printed, Published and Owned by M.Mohamed Iqbal and Printed at Evergreen Computer Graphics Printers, No: 208/1-A, Ganapathy Nagar, Ist Cross, Ariyamangalam, Tiruchirappalli - 620010 and Published at Plot No:26, Vallalar Nagar, Esanaikorai, Keelavaladi, Tiruchirappalli balli 621218. Editor: M.MOHAMED IQBAL